வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 29.05.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 143 பக்கங்கள் : 08




# இலங்கைக்கு 695 மில்லியன் டொலரை விடுவித்தது சர்வதேச நாணய நிதியம்!

## பெரும்பாலான அடைவுகள் எட்டப்பட்டுள்ளன என்றும் பாராட்டு




**கொழும்பு, மே. 29**
**சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது கூட்டு மீளாய்வுகளை நிறைவு செய்துள்ளதுடன், சுமார் 695 மில்லியன் அமெரிக்க டொலர்களை உடனடியாக விடுவிப்பதற்கும் ஒப்புதல் அளித்துள்ளது.**

இலங்கை 2025 டிசெம்பர் இறுதி வரையிலான அனைத்து அளவிடக்கூடிய செயல்திறன் அளவுகோல்களையும் பூர்த்தி செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், பெரும்பாலான கட்டமைப்பு மைல்கற்கள் எட்டப்பட்டுள்ளன அல்லது தாமதங்களுடன் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்றும் கூறியுள்ளது.

இந்த புதிய தவணையுடன், இந்த திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி சுமார் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.


இது தொடர்பான அறிக்கையை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு போர் மற்றும் "டித்வா" சூறாவளியின் பின்னடைவுகள் உள்ளிட்ட உலகளாவிய மற்றும் உள்நாட்டு சவால்களுக்கு மத்தியிலும், சீர்திருத்த திட்டத்தின் கீழ் இலங்கையின் செயல்திறன் "பொதுவாக வலுவாக" இருந்தது என்று சர்வதேச நாணய நிதியம் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

07

# செப்ரெம்பருடன் எரிபொருள் மானியம் நிறைவடையலாம்!

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 29
இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள 100 பில்லியன் ரூபாய் மதிப்பிலான எரிபொருள் மானிய திட்டம் தற்காலிகமானது என்றும், அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைய வாய்ப்புள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இலங்கைக்கு 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைக்கவுள்ளதுடன், இதுவரை வழங்கப்பட்ட மொத்த நிதியுதவி 2.4 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளதாக நாணய நிதிய தூதுக்குழுத் தலைவர் இவான் பாபஜோர்ஜியோ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கை மத்திய வங்கி பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் செயல்பட்டு வருவதாகவும், 2022 ஆம் ஆண்டில் 60-70 வீதமாக காணப்பட்ட பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்துக்கு குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், தற்போது நடைமுறையில் உள்ள 100 பில்லியன் ரூபாய் மதிப்பிலான எரிபொருள் மானிய திட்டம் தற்காலிகமானது என்றும், அது எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

07

# இராணுவம் மேலும் வலு பெறவேண்டும்! படைக்குறைப்பு ஏற்புடையதொன்றல்ல!!

## அரசிடம் சரத் பொன்சேகா வலியுறுத்து



கொழும்பு, மே. 29
"நாட்டின் பாதுகாப்பு விவகாரங்களில் எவ்வித தளர்வுகளையும் மேற்கொள்ளக் கூடாது. இராணுவம் மேலும் வலுப்படுத்தப்படவேண்டுமே தவிர, படைக்குறைப்பு செய்வது ஏற்புடைய நடவடிக்கை அல்ல" என்று முன்னாள்

07

# பௌத்த விகாரைகளின் நிர்வாகத்தில் தலையிடுவதை அரசு நிறுத்தவேண்டும்

## இராஜாங்கனை சத்தாரதன தேரர் எச்சரிக்கை

கொழும்பு, மே. 29
ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த விகாரைகள் மற்றும் புனித இடங்களின் நிர்வாகத்தில் தலையிடுவதையும், அவற்றின் சொத்துக்களைக் கையகப்படுத்த முற்படுவதையும் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும் என இராஜாங்கனை சத்தாரதன தேரர்

07

# காணாமல்போனோருக்கான நிதி குறைக்கப்படவில்லை!

## குற்றச்சாட்டுகளை நிராகரித்தது காணாமல்போனோர் அலுவலகம்

கொழும்பு, மே. 29
காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளதாக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைக் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் முற்றாக நிராகரித்துள்ளது.

07

# நயினாதீவு படகிலிருந்து தவறி வீழ்ந்து பாடசாலை அதிபர் பரிதாப உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், மே. 29
நயினாதீவு கடலில் படகிலிருந்து தவறி விழுந்து பாடசாலை அதிபர் உயிரிழந்துள்ளார்.

நயினாதீவை சேர்ந்த, நயினாதீவு சிறீ கணேசா கனிஷ்ட மகாவித்தியால அதிபரான

07

# கடலுக்கு சென்ற மீனவர்கள் நான்கு பேரை காணவில்லை!

## தேடுதல் பணிகள் தீவிரம்

வடமராட்சி, மே. 29
பருத்தித்துறை முனை, மற்றும் கற்கோவளம் பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் கடற்றொழிலுக்கு 2 படகுகளில் சென்ற 4 பேர் கரை திரும்பாத நிலையில் நேற்று காலை முதல் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

07

# கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகும் சிறுவர்கள்!

## விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்த அரசாங்கம் ஆலோசனை

கொழும்பு, மே. 29
சிறுவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் ஸ்மார்ட் போன் பயன்பாடு மற்றும் திரை அடிமைத்தனம் குறித்த கவலைகளுக்கு மத்தியில், பெற்றோரை

07

# சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டவுடன் மாகாணத் தேர்தலை நடத்துவோம்!

## அமைச்சர் சந்தன அபேரத்ன கூறுகிறார்



கொழும்பு, மே. 29
மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். தேர்தலை பிற்போடவேண்டிய நோக்கம் அரசாங்கத்துக்கு

07

# மாகாண சபைகளுக்கு எதிராக நாட்டுக்கு தீ வைத்தது ஜே.வி.பி.!

## ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 29
"மாகாண சபைத் தேர்தல் முறைமைக்கு எதிராகக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, நாடு முழுவதும் தீவைக்கும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டது ஜே.வி.பி.தான்"

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்பாட்டு அரசியலுக்கு மீண்டும் வரமாட்டார் ரணில்!

## கூறுகிறார் ரவி கருணாநாயக்க



கொழும்பு, மே. 29

"ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார். மீண்டும் செயல்பாட்டு அரசியலுக்கு வருவார் என நான் நம்பவில்லை." என்று ஐ.தே.க. உறுப்பினரான, ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பாராளுமன்றம்வரவுள்ளார், தேசிய அரசமையவுள்ளது என்றெல்லாம் வெளியாகும் தகவல் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"ரணில் விக்கிரமசிங்க அல்ல, ஏனையோர்தான் இது பற்றி கருத்து வெளியிட்டுவருகின்றனர். ஐதேக தலைவராக நாட்டில் வகிக்க வேண்டிய உச்ச பதவியை அவர் வகித்துவிட்டார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளை சவாலை தான் எதிர்கொண்டதாகவும், பின்னர் மக்கள் தன்னை நிராகரித்தாகவும், தான் தற்போது அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

மேற்படி நிலைப்பாட்டிலேயே அவர் இருப்பார் என நான் நம்புகின்றேன்.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் கட்சி தாவுவதை தடுக்கும் சட்டமூலத்தை நான் வரவேற்கின்றேன்." - என்றார் ரவி கருணாநாயக்க. (அ)

# நிலக்கரி கொடுக்கல் வாங்கல் வாக்குமூலம் பதிவு தொடரும்

கொழும்பு, மே. 29

நிலக்கரி கொள்முதல் விவகாரத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யும் பணிகள் மேலும் தொடரும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நிலக்கரி நிறுவனம், லக்விஜய மின்நிலையம் மற்றும் மின்சக்தி அமைச்சின் அதிகாரிகளிடமிருந்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன.

நிலக்கரி கொள்முதல் குறித்து விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பகிரங்க சாட்சி விசாரணைகளும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை, நிலக்கரி கொள்முதல் தொடர்பான கோப் குழுவின் விசாரணை அறிக்கை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி நிறுவனம் மற்றும் லக்விஜய மின்நிலையத்தின் நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினரை கோப் குழுவின் முன்னிலைக்கு அழைத்து, நிலக்கரி கொள்முதல் குறித்து விசாரணை நடத்தியதாக கோப் குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்ட பல கணக்காய்வு அறிக்கைகளும் இந்த விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.


மேலும் விசாரணை செய்யப்பட வேண்டும் என அடையாளம் காணப்படும் பகுதிகள் குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் லஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிலக்கரி மோசடி குறித்து எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டினாலும், இதுவரை எவரும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவில்லை என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் கத்தினார்கள், சத்தமிட்டார்கள். வெளியில் ஆயிரக்கணக்கான ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தினார்கள். பத்து பதினைந்து போர்டுகளை பிடித்துக்கொண்டு நடனமாடினார்கள். பாராளுமன்ற சுற்று வட்டாரத்தில் நின்றார்கள். இந்த எதிர்க்கட்சியினர் கடந்த காலத்தில் காலையிலும் நிலக்கரி சாப்பிட்டார்கள், மதியமும் நிலக்கரி சாப்பிட்டார்கள். ஏன், இரவு உணவுக்கும் நிலக்கரியையே எடுத்தார்கள். அப்படி துள்ளிக் குதித்த எதிர்க்கட்சியினர் இப்போது எங்கே போய் முறைப்பாடு செய்துள்ளார்கள்? -என்றார். (அ)

# நியூசிலாந்து வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் அமைச்சர் விஜித ஹேரத்!

## இரு தரப்பு விவகாரங்கள் குறித்து ஆராய்வு



வெலிங்டன், மே. 29

நியூசிலாந்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ள அமைச்சர் விஜித ஹேரத், இந்த உத்தியோகபூர்வ விஜயத்திற்கான அழைப்பை விடுத்தமைக்காகவும், அவருக்கும் இலங்கைத் தூதுக் குழுவினருக்கும் மதிய உணவு விருந்தளித்தமைக்காகவும் அமைச்சர் பீட்டர்ஸுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஹேரத்தின் கூற்றுப்படி, இரு அமைச்சர்களும் அரசியல் உறவுகள், வர்த்தகம், விளையாட்டு, ஆளுமை மற்றும் நியூசிலாந்தில் வாழும் இலங்கை சமூகம் உள்ளிட்ட இருதரப்பு விவகாரங்கள் பல குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய உலகளாவிய மற்றும் பிராந்திய முன்னேற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் குறித்தும் இரு அமைச்சர்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் வாழும் 30,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு இராஜதந்திர மற்றும் தூதரக சேவைகளை வழங்குவதற்காக, வெலிங்டனில் இலங்கையின் புதிய தூதரகத்தை திட்டமிட்டபடி திறந்து வைப்பது உள்ளிட்ட தொடர்ச்சியான உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அமைச்சர் விஜித ஹேரத் தற்போது நியூசிலாந்திற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 2 மாதம் நிரம்பிய பெண் குழந்தை யாழில் பரிதாபமாக உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே. 29

யாழில் இரண்டு மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை ஒன்று நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளது.

கச்சேரியடி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த விதுசன் சாயிஷா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு நேற்று முன்தினம் தாயார் பாலூட்டியுள்ளார். பின்னர் நேற்று அதிகாலை குழந்தை அசைவற்று காணப்பட்டது.

இந்நிலையில் குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். இருப்பினும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

மரணத்திற்கான காரணம் தெரியவராத காரணத்தால் மேலதிக பரிசோதனைகளுக்காக குழந்தையின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (அ-05)

# யாழ். பல்கலை விஞ்ஞான பீடாதிபதியாக கலாநிதி தபோதரன் ஏகமனதாகத் தெரிவு!



யாழ்ப்பாணம், மே. 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக கணினி விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கதிரவேலு தபோதரன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜனின் பதவிக் காலம் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான பீடச்சபைக் கூட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலாநிதி கதிரவேலு தபோதரன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் செயற்படும் வகையில் இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது. (அ)

# 6 சீனப் பிரஜைகள் கைது!

கொழும்பு, மே. 29

கொள்ளுப்பிட்டியில் உரிமமின்றி பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 சீன நாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி வீதியில் இயங்கி வந்த இரவு விடுதியொன்றினை முற்றுகையிட்டபோதே இக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 27 முதல் 48 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் விசேட மாநாடு

கொழும்பு, மே. 29

பகிரப்பட்ட பாரம்பரியத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் நல்லிணக்கத்திலும் சமயப் பன்முகத்தன்மையின் பலன்கள் என்ற தலைப்பிலான விசேட மாநாடும் ஆவணப்பட வெளியீடும் நேற்று முன் தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், தொல்பொருள் ஆய்வாளர்கள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் கலிங்க துடர் சில்வா "நமது பயணம்" என்ற தலைப்பில் திட்டத்தின் நோக்கங்கள் குறித்த விளக்கக் காட்சியை வழங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய பேராதனைப் பல்கலைக்கழக தொல்பொருள் திணைக்களத் தலைவரும், மத்திய பண்பாட்டு நிதியத்தின் தொல்பொருள் ஆலோசகர் பணிப்பாளருமான பேராசிரியர் அருண ராஜபக்ஷ மற்றும் தொல்லியல் பணிப்பாளர் நாயகம் செனரத் விக்ரமசிங்க ஆகியோர், நாட்டின் வரலாறு மற்றும் தொல்பொருள் சின்னங்கள் எவ்வாறு இனங்களுக்கு இடையே பாலமாக அமைய முடியும் என்பது குறித்த விளக்கத்தை வழங்கினர்.

இதன்போது, அமைதிக்கான ஒரு தாழ்வாரமாக பகிரப்பட்ட பாரம்பரியம் என்ற தலைப்பிலான விசேட ஆவணப்படம் திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆன்ட்ரே பிரெஞ்ச், இலங்கையின் நிலையான அமைதிக்கும் நல்லிணக்கத்திற்கும் சமயப் பன்முகத்தன்மையும், பகிரப்பட்ட கலாசார விழுமியங்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை சுட்டிக்காட்டினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
29.05.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## வெற்றியில் நம்பிக்கையுடைய அரசாங்கங்கள் தேர்தல்களை தாமதிப்பதில்லை

அரசாங்கம் மேலும் காலந்தாழ்த்தாமல் மாகாண சபை தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கையில் தீவிரமடையத் தொடங்கியிருக்கிறது.

கொழும்பில் கடந்த செவ்வாய்கிழமை சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பினால் (பவ்ரல்) ஏற்பாடு செய்த கலந்துரையாடலில் கொண்ட 42 அரசியல் கட்சிகள் மற்றும் சிவில். சமூக அமைப்புக்கள் 2017ஆம் ஆண்டில் மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் இருந்த நடைமுறையின் பிரகாரம் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற யோசனையை ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

மாகாண சபை தேர்தல்களை எந்த முறையின் கீழ் நடத்துவது என்று ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை வருவதற்கு முன்னதாக தேர்தல்களை நடத்தலாம் என்பதையும் இந்த கட்சிகளும் அமைப்புக்களும் சுட்டிக் காட்டியிருக்கின்றன. அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க மாத்திரம் இந்த கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை.

வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழு விரைவாக இரு தீர்மானத்துக்கு வருவது சாத்தியமில்லை. அந்த குழு மூன்று மாதங்களில் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே அதற்குரிய அடிப்படை ஆணை. ஆனால், மூன்று மாதங்கள் இப்போது கடந்து விட்டன. மாகாணசபை தேர்தல்கள் சுமார் பத்து வருடங்களாக தாமதிக்கப் பட்டிருக்கும் நிலையில், இந்த தடவை அல்ல, அடுத்த தடவை பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதே நடைமுறைச் சாத்தியமானதும விவேகமானதுமான முடிவாக இருக்கும் என்பதே ஆளும் கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளின் (வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட) ஏகோபித்த அபிப்பிராயமாக இருக்கிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் விரைவாக மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதே பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களினதும் நிலைப்பாடாக இருக்கிறது. தேர்தலை சாத்தியமானளவுக்கு தாமதிப்பதே தெரிவுக் குழு நியமிக்கப்பட்டதன் நோக்கம் என்ற நியாயமான சந்தேகத்தை இந்த நான்கு உறுப்பினர்களும் ஏற்கெனவே கிளப்பியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


இதனிடையே, ஆளும் தேசிய மக்கள் சக்திக்குள்ளும் மாகாண சபை தேர்தல்கள் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாடு கிடையாது. ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் இறுதியாக தேர்தல்களை இவ்வருடம் நடத்துவதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லை என்று கூறிய அதேவேளை, அமைச்சர் லால்காந்த போன்ற ஜே.வி.பி.யின் மூத்த அமைச்சர்கள் அரசாங்கத்திடம் நிதியில்லை என்பது தவறான கருத்து என்று பகிரங்கமாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் நோக்கம் தேர்தலை பின்போடுவது அல்ல என்றால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் அதை நடத்துவதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவது மிகவும் இலகுவான காரியம். தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்கள் (159) இருக்கின்றன.

தேர்தல்களை மேலும் சில வருடங்கள் தாமதித்தால் மாகாணசபைகள் என்ற ஆட்சிமுறையின் இரண்டாவது அடுக்கு நீண்டகாலமாகச் செயற்படாமல் நாடு ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை என்று வாதிட்டு இலங்கையின் அரசியலமைப்பில் இருக்கும் ஒரேயொரு அதிகாரப் பரவலாக்க ஏற்பாட்டையும் இல்லாமல் செய்வதற்கு வழிவகுத்து விடலாம் என்று ஜே.வி.பி. தலைவர்கள் நம்புகிறார்கள் போலும்.

எது எவ்வாறிருந்தாலும், தங்களால் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையுடைய எந்த தேர்தலையும் அரசாங்கங்கள் ஒத்திவைப்பதில் அக்கறை காட்டுவதில்லை என்பதை ஈழநாடு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

# ஒரு தேசத்தின் அவமானம்



### சீர்குலைக்கப்பட்ட நீதி

முடிவு மிகவும் தெளிவாகவும் மனச்சோர்வளிப்பதாகவும் உள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழும் நீதி என்பது பாரபட்சமானது அது பாதிக்கப்பட்டவரினதும் குற்றம் சாட்டப்பட்டவரினதும் அந்தஸ்தைப் பொறுத்தே அமைகிறது. "மறுமலர்ச்சி" என்ற பதாகைக்குப் பின்னால், பின்னடைவே ஆட்சி செய்கிறது.

ஊடக அறிக்கைகளின்படி, சிறுமி. "எக்ஸின்" கொடூரமான துயரம் 2023ஆம் ஆண்டில், அவளுக்கு வெறும் 11 வயதுக்கு மேல் இருக்கும் போதே தொடங்கியது.

துஷ்பிரயோகம் எனும் கொடூரமான பிடிக்குள் சிக்குவதற்கு முன்பு அவள் எப்படி இருந்திருப்பாள் என்பது நமக்கு ஒருபோதும் தெரியாது. அவள் படிப்பாளியா அல்லது விளையாட்டுத்தனமானவளா? அவள் தீவிரமானவளா அல்லது நகைச்சுவையானவளா? அவள் புத்தகங்களைப் படித்தாளா, மரங்களில் ஏறினாளா அல்லது குளங்களில் நீந்தினாளா? அவளது இன்னும் முழுமையடையாத இயல்பு எதுவாக இருந்தாலும், அந்த வயதிலுள்ள மற்ற எந்தக் குழந்தையையும் போலவே, அவளும் பள்ளிக்குச் சென்றிருப்பாள், நண்பர்களுடன் விளையாடியிருப்பாள் மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளைக் கண்டிருப்பாள்.

துஷ்பிரயோகத்தின் அந்தக் கொடூரமான நரகத்தை (அந்தத் துறவி அவளை ஒவ்வொரு மூன்று நாட்களுக்கு ஒருமுறையும் அழைத்ததாகக் கூறப்படுகிறது) கடந்து வாழ்வது அவளுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை நம்மால் அறிய முடியாது. அந்த முதல் நாளைப் பற்றி அவளது தாய் தனது வாக்குமூலத்தில் கூறியது மட்டுமே நமக்குத் தெரிந்தவை.

தனது மகளுடன் சென்ற தாய், அந்தத் துறவியின் வசிப்பிடத்திற்குப் பின்னால் சென்று, துறவி குழந்தையைத் தனது அறைக்குள் அழைத்துச் சென்றபோது வெளியே காத்திருந்தார். சுமார் 10 நிமிடங்களுக்குப் பிறகு குழந்தை வெளியே வந்தபோது, அவளது முகம் "மகிழ்ச்சியற்றதாக/கசப்பானதாக" இருந்தது. என்னவென்று கேட்டபோது, துறவி தனது முகத்தில் முத்தமிட்டதாக அவள் பதிலளித்தாள்.

சிறுமி எக்ஸூக்கு தனக்காகக் காத்திருக்கும் கொடூரத்தின் துல்லியமான தன்மையைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை, ஆனால் அதன் முதல் அனுபவமே அவளது முகத்தை மகிழ்ச்சியற்றதாக / கசப்பானதாக மாற்றப் போதுமானதாக இருந்தது. அவள் தனது விதியைப் பற்றி முழுமையாக அறிந்திருந்தாலும், அவளால் என்ன செய்திருக்க முடியும்? பாதுகாப்புக்காக அவள் யாரிடம் திரும்பியிருக்க முடியும்? அவளை விற்ற அவளது பெற்றோரிடமா? அல்லது காவல்துறையிடமா?

எல்லாவற்றிற்கும் மேலாக, குற்றச்சாட்டுகள் துல்லியமானவை என்றால், துறவியின் அறைக்குச் செல்லும் வழியில், அவள் அவரது போலீஸ் பாதுகாப்பைக் கடந்துதான் சென்றிருக்க வேண்டும். அநுராதபுரத்தில் தனது குறுகிய வாழ்நாள் முழுவதையும் கழித்த அவள், அட்டமஸ்தானாதிபதி துறவியின் அதிகாரத்தையும் அறிந்திருந்திருப்பாள். அவளது பெற்றோர் ருவன்வெலிசேய அருகே பூக்களும் தேனும் விற்றதால், அவர்களின் வாழ்வாதாரமும் அவரது கைகளில்தான் இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் ஒரு குழந்தையால் என்ன செய்ய முடியும்? எவ்வாறாயினும் அடிபணிந்து பிழைப்பதைத் தவிர அவளுக்கு வேறு என்ன வழி இருந்திருக்க முடியும்?

இப்படிப்பட்ட ஒரு குழந்தையைத்தான் திலும் அமுனுகம ஒரு விலைமகள் என்று அழைத்தார். அவரது வார்த்தைகள் மிகவும் கொடூரமானவையாக இருந்தபோதிலும், அவரது கட்சித் தலைவர் திலித் ஜயவீர, சர்வஜன பலய கட்சியின் அவரது சகாக்கள் மற்றும் ஒட்டுமொத்த எதிர்க்கட்சியினர், அதேபோல் அரசாங்கத்தில் உள்ள அவரது எதிர்த்தரப்பினர் ஆகியோரின் மௌனம் அதைவிட மோசமானது. அவர்களின் இந்த கூட்டு மௌனம், நமது அரசியல் வர்க்கத்தின் கோழைத்தனம், சுயநலம் மற்றும் தார்மீகக் கூட்டுக் குற்றம் ஆகியவற்றைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் நமக்குக் கூறுகிறது.

(தற்செயலாக, குற்றம் சாட்டப்பட்ட ஒரு குழந்தை பலாத்காரவாதியின் முன்னால் மண்டியிட்டு அவரது ஆசிர்வாதத்தைக் கேட்கும் முதல் அரசியல்வாதி யாராக இருக்கும்?)

குற்றம் சாட்டப்பட்ட துறவி வெறும் சந்தேக நபர் மட்டுமே. ஒரு ஜனநாயக நாட்டின் குடிமகனாக, நிரபராதி என்ற அனுமானம் அவரது அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும். விரைவான, வெளிப்படையான மற்றும் நியாயமான விசாரணை அவரது நலனுக்கு உகந்தது, ஏனெனில் அது சட்டத்தின் முன் மட்டுமல்லாமல், மக்கள் மன்றத்தின் முன்னிலையிலும் தனது நிரபராதித் தன்மையை நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பை வழங்கும்.

துரதிர்ஷ்டவசமாக, அவரது சொந்த ஏய்ப்புகளும் பொலிஸின் தாமதப்படுத்தும் உத்திகளும் நீதிச் செயல்முறையின் நேர்மை குறித்து கடுமையான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

இது தொடர்பான வழக்கின் காலவரிசை பின்வருமாறு:

ஏப்ரல் 10: சிறுமி. எக்ஸ், நிட்டம்புவ பொலிஸிடம் தனது வாக்குமூலத்தை அளித்து, துறவியை தனது முதல் துஷ்பிரயோகதாரராகக் குறிப்பிடுகிறார்.

ஏப்ரல் 22: பொலிஸின் 12 நாட்கள் செயலற்ற தன்மைக்குப் பிறகு, சுயாதீன ஊடகவியலாளர் பிமல் ருஹூனுகே தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் புகார் ஒன்றை பதிவு செய்கிறார். விந்தை என்னவென்றால், இந்த வழக்கைப் பற்றி அதிகாரசபைக்கு தெரிவிக்க பொலிஸ் தவறிவிட்டது.

ஏப்ரல் 23: விசாரணை தொடங்கப்பட்டுள்ளதா என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவிடம் அதிகாரசபை விசாரிக்கிறது, அதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏப்ரல் 24: தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவரும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியுமான பிரீத்தி இனோகா ரணசிங்க, பிரதிப் பொலிஸ் மா அதிபர் மெதவத்தவிற்கு கடிதம் மூலம் பின்வரும் அறிவுறுத்தல்களை வழங்குகிறார்:

சிறுமி எக்ஸ் மறைத்து வைத்திருந்த அவளது உள்ளாடைகளை மரபணுச் சோதனைக்கு அனுப்புவதற்கான நீதிமன்ற உத்தரவுகளைப் பெறுதல், துறவிக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்தல், அதிகாரசபை அதிகாரிகளின் முன்னிலையில் சிறுமி எக்ஸின்வாக்குமூலத்தை வீடியோ பதிவு செய்தல் மற்றும் சந்தேக நபரான துறவி அந்தச் சிறுமிக்கு வழங்கியதாகக் கூறப்படும் தொலைபேசியின் தரவுகளைப் பெறுதல். மேலும்,

(நாளை தொடரும்)

- திசரானி குணசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 29 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 15

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | சதுர்த்தசி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உங்கள் கை ஓங்கும்.

**மிதுனம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் தனித் திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். அதிகாரிகள் வழி வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
சில முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அதிகாரிகள் முக்கி யத்தும் தருவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். மரியாதைக் கூடும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகமாகும். போராட்டமான நாள்.

**விருட்சிகம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிய சூழல் உருவாகும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் சங்கடங்கள் வரும்.

**தனுசு**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பிள்ளைகளால் உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்திற்காக கடையை புது இடத்திற்கு மாற்றுவீர்கள். பாராட்டப் படுவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உடல் அசதி மனச் சோர்வு வந்து நீங்கும். உறவினர்கள் நண்பர்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களை விட்டுப் பிடிப்பது நல்லது.

# நூதனமுறையில் போதை மாத்திரைகள் விற்பனை செய்தவர் யாழில் சிக்கினார்

## 1,800 போதை மாத்திரைகள் மீட்பு

யாழ்ப்பாணம், மே. 29

யாழ்ப்பாணம் சிவன்கோயிலை அண்மித்த பகுதியில் மிக நூதனமான முறையில் போதை மாத்திரை வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த ஒருவர் 1800 போதை மாத்திரைகளுடன் யாழ் போதை ஒழிப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.நகரப் பகுதியில் ஒன்லைன் கூரியர் சேவையூடாக போதை மருந்துகள் கொண்டு வரப்பட்டு விநியோகிக்கப்படுவதாக யாழ். பொலிஸ் நிலைய உதவிப் பரிசோதகருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகரி செனவிரத்னவின் ஒருங்கமைப்பில் பொலிஸார் மேற்கொண்ட புலனாய்வு தகவலின் அடிப்படையில் “கூரியர்” சேவையூடாக கொழும்பிலிருந்து பொதி செய்யப்பட்டு குருநகர் பகுதியில் இருக்கும் தபால் நிலையத்துக்கு வந்த பொதியை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைப்பற்றி சோதனையிட்டபோது குறித்த போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பொலிஸாரின் இந்த துரித நடவடிக்கையின்போது சுமார் 1800 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் குறித்த மாத்திரைகளை கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் நபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# மன்னார் வீராங்கனைக்கு கௌரவம்

மன்னார், மே. 29

இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏ பிரிவில் இடம் பிடித்துள்ள மன்னார் மாவட்டம் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் சஜிந்தினி என்ற வீராங்கனையை வரவேற்கும் நிகழ்வு நேற்றுக் காலை மன்னார் அரச பஸ் நிலைய பகுதியில் இடம்பெற்றது.

பேசாலை புனித பற்றிமா மகா வித்தியாலய பாடசாலை நிர்வாகம் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து நிகழ்வை முன்னெடுத்தனர்.

மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் வீராங்கனை மற்றும் விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டு இசை வாத்தியம் முழங்க மன்னார் பஜார் பகுதியூடாக மாவட்ட செயலகம் வரை ஊர்வலமாக அழைத்து செல்லப் பட்டனர்.

பின்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த வீராங்கனையை கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த மாணவி அவரது சொந்த கிராமமான பேசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மன்னார் பேசாலை 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் சஜிந்தினி என்ற மாணவி பேசாலை புனித பற்றிமா மகா வித்தியாலய பாடசாலையின் பழைய மாணவியவார்.

இவர் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏ பிரிவில் இடம் பிடித்துள்ள நிலையில் இலங்கை நியூசிலாந்து ஏ மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டியிலும் கலந்து கொண்டார்.

இந்த நிலையில் குறித்த வீராங்னையை கௌரவிக்கும் வகையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பட்டாணிச்சூரிலும் ஹஜ் தொழுகை

வவுனியா, மே. 29

வவுனியா, பட்டாணிச்சூரில் ஹஜ் பெருநாள் திடல் தொழுகை நேற்று காலை இடம்பெற்றது.

தௌபீக் ஜூம்மா பள்ளிவாசலின் ஏற்பாட்டில், ஹஜ் பெருநாள் திடல் தொழுகை நேற்று காலை பட்டாணிச்சூர் 5ஆம் ஒழுங்கை குடா வயல் திடலில் மிகச் சிறப்பாக் இடம்பெற்றது.

மௌலவி ஆசீஸ் அரபாத் தலைமையில் விசேட தொழுகை இடம்பெற்றது.

இவ்விசேட தொழுகையில் பட்டானிச்சூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு தொழுகையை நிறைவேற்றினர்.

தொடர்ந்து, ஒருவருக்கொருவர் தமது பெருநாள் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு பரிமாறிக் கொண்டனர். (அ)

# தெல்லிப்பழை யூனியன் மாணவ முதல்வர் தினம்

யாழ்ப்பாணம், மே. 29

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் ஏழமாணவ முதல்வர் தினமும்ஏழ “யூனியன் லீடர்” மலர் வெளியீட்டு நிகழ்வும் நேற்று முன் தினம் கல்லூரி மாணவ முதல்வர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் தி. வரதன் முன்னிலையில் பிரதம விருந்தினராக பழைய மாணவியும் ஆயுள்வேத வைத்திய அதிகாரியுமான திருமதி ரு. பிரேமச்சந்திரா கலந்து கொண்டார்.

வலிகாம வலய இந்துசமய வளவாளர் முகுந்தன், பிரான்ஸ் பழைய மாணவர் சங்க பொருளாளர் தயா, இலண்டன் வாழ் பழைய மாணவர் அகிலன் உள்ளிட்டோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

விருந்தினர்கள் கல்லூரி சமூகத்தினரால் வரவேற்கப்பட்டதுடன் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், அயல் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (அ)

# காணாமற்போன குருநகர் மீனவர் புங்குடுதீவு கடலில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே. 29

கடற்தொழிலுக்காகச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த யாழ். குருநகரை சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் புங்குடுதீவுக் கடலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலம் நேற்று முன் தினம் புங்குடுதீவு 3ஆம் வட்டாரக் கடற்பரப்பில் கரை ஒதுங்கியுள்ளது.

சென்.பற்றிக்ஸ் வீதி குருநகர் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய வேலு உதயகுமார் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முன்னதாக கடந்த 25ஆம் திகதி தொழிலுக்கு சென்ற குறித்த தொழிலாளி கரைதிரும்பவில்லை என பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பல தரப்பினராலும் தேடுதல் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த கடற்றொழிலாளி மீட்கப்படாதிருந்த நிலையில் நேற்று புங்குடுதீவு 3 ஆம் வட்டார கடற்பரப்பில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியிருந்தது.

இந் நிலையில் காணாமல் போன தொழிலாளியின் உறவினர் ஒருவரால் சடலம் அடையாளம் காட்டப்பட்டது.

இதையடுத்து குறித்த சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. (அ)

# மன்னாரில் ஹஜ் பெருநாள் தொழுகை

மன்னார், மே. 29

உலக வாழ் இஸ்லாமியர்கள் நேற்று புனித ஹஜ் பெருநாளை கொண்டாடிய நிலையில் மன்னார் மாவட்ட இஸ்லாமியர்களும் ஹஜ் பெருநாளை கொண்டாடினர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஹஜ் பெருநாள் திடல் தொழுகை இடம் பெற்றது.

அஷ்ஷெய்க் தஸ்னீம் மௌலவி தலைமையில் குறித்த திடல் தொழுகை இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து இறை தூதரின் தியாகம் எனும் தலைப்பில் பெருநாள் பிரசங்கம் இடம் பெற்றது.

தொழுகையை தொடர்ந்து ஒருவருக்கு ஒருவர் தமது ஹஜ் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி வாசல்களிலும் பெருநாள் தொழுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளாதார அபிவிருத்தியின்போது மத மறுமலர்ச்சியும் அவசியமானது!

## அரச வெசாக் விழாவில் ஜனாதிபதி அநுர

கொழும்பு, மே. 29

நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு மத மறுமலர்ச்சி இன்றியமையாதது எனவும், உன்னத புத்த சாசனத்தையும் தர்மத்தையும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாப்பதற்காக அனைவருக்கும் உள்ள பொறுப்புக்களைச் சரியாக இனங்கண்டு, அதற்காகக் கைகோர்ப்பதே இந்த வெசாக் புண்ணிய தினத்தில் நாம் எடுக்கக்கூடிய சிறந்த உறுதிமொழியாகும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



திஹகொட, மிதெல்லவல புராதன ரஜமஹா விகாரையில் நடைபெற்ற அரச வெசாக் விழாவின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய வெசாக் விழாவையொட்டி இந்திய தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியும் இங்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டதுடன், இப்புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிடுவதிலும் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

மாத்தறை மாவட்டத்தின் மூன்று விகாரைகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட மூன்று வெசாக் நினைவு முத்திரைகளும் இங்கு வெளியிடப்பட்டதுடன், அதன் முதல் தபால்தலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

தென் மாகாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில வழிபாட்டுத் தலங்களுக்கு, புனித பூமிக்கான காணிப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி,

சங்க சபையை ஒழுக்கநெறியுடன் பேணிச் செல்வதற்குத் தேவையான சட்டங்களை மிக விரைவில் இயற்றித் தருவோம்.

இந்தத் தர்மமானது தற்காலத்தில் வாழ்கின்ற நமக்கோ அல்லது காவி உடை தரித்து வீற்றிருக்கும் மகா சங்கத்தினருக்கு மட்டுமோ சொந்தமான தொன்றல்ல.

இந்தத் தர்மமானது நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த விமோசனத்திற்காகவும், நன்மைக்காகவும் போதிக்கப்பட்ட ஒரு தர்மமாகும்.

அகில உலக மக்களின் விமோசனத்திற்காகப் போதிக்கப்பட்ட தர்மத்தைப் பாதுகாப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். நாம் பொருளாதார ரீதியாக வளம் மிக்க ஒரு நாட்டை நோக்கி பயணிக்கும் போது, மீண்டும் நமது நாட்டுக்கு ஆன்மீக மறுமலர்ச்சியும் அவசியமாகிறது.

அந்தப் பொருளாதார மற்றும் ஆன்மிக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே எமது அரசாங்கத்தின் முயற்சியாகும்.

நமது பௌத்த சமூகம், பாதிரியார்கள், மௌலவிமார், குருக்கள் என நாம் அனைவரும் பிள்ளைகளின், இளைய தலைமுறையினரின் பாதுகாப்பிற்காகவும், நமது நாட்டின் மத மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட வேண்டும்.

தர்மம், ஒழுக்கம், சீர்குலைந்த இடத்தில் குற்றங்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் சமூகப் பேரழிவுகள் உருவாவதைத் தடுக்க முடியாது.

நமது புத்த பெருமானின் புனித முப்பெரும் நிகழ்வுகளை நினைவுகூரும் இந்த வேளையில், இந்த மோசமான சூழ்நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது-என்றார்.

(அ)

# மழை மேலும் தொடரும்

கொழும்பு, மே. 29

நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் தற்போது நிலவும் மழை நிலைமை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களிலும் பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

(அ)

# அஸ்வெசும கொடுப்பனவுகள் இன்று வங்கிக் கணக்குகளுக்கு

கொழும்பு, மே. 29

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான மே மாதத்திற்கான கொடுப்பனவுகளை, இன்று பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, அஸ்வெசும திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் தகுதி பெற்ற சுமார் 7 இலட்சம் முதியவர்களுக்காக, 349 கோடியே 39இலட்சத்து 15ஆயிரம் ரூபாய் நிதியை அரசாங்கம் விடுவித்துள்ளது.

அந்த வகையில் முதலாம் கட்டத்தின் கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட 6 இலட்சத்து25 ஆயிரத்து128 பயனாளிகளுக்கும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 73ஆயிரத்து663 முதிய பயனாளிகளுக்கும் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அனைத்து பயனாளிகளும் தமக்குரிய முதியோர் கொடுப்பனவை நாளை முதல் தமது அஸ்வெசும பயனாளிகள் வங்கிக் கணக்கின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என சபை மேலும் அறிவித்துள்ளது. (அ)

# களுத்துறை துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 29

களுத்துறை, பள்ளிவாசல் வீதி, வெட்டுமகட பகுதியில் நேற்றுக் காலை 8.59 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த வர்த்தகர் ஒருவரை இலக்கு வைத்து, காரில் வந்த நபர் ஒருவரே இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவரை கைது செய்வதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை தொடங்கியுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யூ.வுட்லர் தெரிவித்துள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு!

## 35,855 புற்றுநோயாளிகள் கண்டறிவு

கொழும்பு, மே. 29

இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளில் மும்மடங்கு அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, நாட்டில் 35,855 புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர்.

தரவுகளின்படி, தினமும் 99 புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்படுகின்றனர் என தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் சமூக மருத்துவ சிறப்பு நிபுணர் திருமதி ஹசரேலி பெர்னாண்டோ சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் இலங்கை தேசிய புற்றுநோய் பதிவேட்டின் தரவுகளின்படி, 35,855 புதிய புற்றுநோய் வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில், 16,398 ஆண்களுக்கும் 19,457 பெண்களுக்கும் புற்றுநோய்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருதமுனை கடற்கரையில் ஹஜ் பெருநாள் தொழுகை



அம்பாறை, மே. 29

மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் தொழுகை நேற்றுக் காலை இடம்பெற்றது.

மருதமுனை இஸ்லாமிய பிரசார மையத்தின் ஏற்பாட்டில் நடத்திய இந்த ஹஜ்ஜூப் பெருநாள் தொழுகை மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கம் என்பவற்றை மருதமுனை தாறுல்ஹூதா மகளிர் இஸ்லாமிய அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல்.எம்.முபாறக் மதனி நிகழ்த்தினார்கள்.

இதில் ஆண்கள், பெண்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். பெண்களுக்கு பிரத்தியோகமான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# நியூசிலாந்தில் இலங்கையருக்கான கல்வி வாய்ப்பு தொடர்பில் ஆராய்வு



கொழும்பு, மே. 29

இலங்கையின் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், நியூசிலாந்தின் உயர்கல்வி அமைச்சர் பென்னி சிம்மன்ஸ்சுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பின்போது நியூசிலாந்தில் இலங்கை மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பில் அமைச்சர் சிம்மன்ஸ்சுடன் வெளியுறவு அமைச்சர் ஹேரத் கலந்துரையாடியுள்ளார்.

நியூசிலாந்தில் இலங்கை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகைகள் மற்றும் தொழிற் பயிற்சியில் திறன் மேம்பாட்டு முயற்சிகள் உள்ளிட்ட கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள் நடைபெற்றதாக அமைச்சர் ஹேரத் அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (அ)

# டெங்கினால் 17 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 29


இந்த வருடத்தில் இதுவரை டெங்கு நோயினால் 17 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இவ்வாண்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 32,071ஆக பதிவாகியுள்ளது.

இதன்படி, டெங்கு பரவும் அபாயம் அதிகமுள்ள பகுதிகளில் ஜூன் 8, 9 மற்றும் 10 ஆகிய திகதிகளில் இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும், கல்முனை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் செயல்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரசாயன வெற்று கொள்கலன்களை அகற்றுவதற்கு புதிய திட்டம் அறிமுகம்



அம்பாறை, மே. 29

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்படுத்தும் இரசாயன திரவங்களின் வெற்றுக் கொள்கலன்களை அகற்றுவதற்கு புதிய திட்டம் ஒன்று அறி முகப்படுத்தப் பட்டிருக்கின்றது.

காரைதீவு பிரதேச விவ சாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட வளைந்தவட்டைக் கிழல் கண்டத்தில் இந்த நிகழ்வு நேற்று முன் தினம் முதல் முறையாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உதவி விவசாய பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் கலந்து கொண்டார்.

விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஒரு செயல் திட்டமாக இந்த வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

விவசாய குழு பிரதிநிதி இரா. திருநாவுக்கரசு உள்ளிட்ட விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் பயன்படுத்தும் கிருமிநாசினிகள் ஏனைய இரசாயன பொருள்களின் வெற்றுக் கொள்கலன்களை முறையாக மூன்று வேறு கொள்கலன்களில் இடுவதன் மூலம் சூழலை பாதுகாப்பதுடன் அவற்றை பயன்படுத்தவும் முடியும் என்று கூறப்படுகிறது.

பச்சை நிற கொள்கலனில் பொலித்தீன் சார்ந்த கழிவுகளும், சிவப்பு நிற கொள்கலனில் கண்ணாடி சார்ந்த கழிவுகளும், நீல நிற கொள்கலனில் பிளாஸ்ரிக் சார்ந்த கழிவுகளும் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இச் செயற்திட்டம் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. (அ)

# கல்முனை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு அருகே துர்நாற்றம் வீசிய குப்பைகள் அகற்றல்

அம்பாறை, மே. 29

அம்பாறை கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகே உள்ள காணியொன்றில், நீண்ட நாள்களாக அகற்றப்படாது துர்நாற்றம் வீசி வந்த குப்பைகளை மாநகர சபை அகற்றியுள்ளது.

மாநகர ஆணையாளர் ஏ.ரி. எம்.றாபியின் அறிவுறுத்தலுக்கமைய கனரக வாகனங்களின் உதவியுடன் குப்பைகள் அகற்றப்பட்டு, அப் பிரதேசம் தூய்மைப்படுத்தப்பட்டது.

மாநகர ஆணையாளரின் நடவடிக்கைகளுக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (அ)

# மட்டு. விமான நிலையம் அருகே விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே. 29

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு அருகே, திருப்பெருந்துறைக்குச் செல்லும் வீதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல உணவகம் ஒன்றில் கடமையாற்றும் இளைஞர் கடமை முடிந்து வீடு நோக்கிச் செல்லும் போதே விபத்தில் சிக்கியுள்ளார்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கல்லில் மோதியதில், இளைஞன் ஆற்றினுள் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இதனை அவதானித்த விமானப்படை வீரர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இளைஞன் உடனடியாக மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதிலும் அங்கு சிக்கிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மட்டக்களப்பு திருப்பெருந்துறை, 4ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 19 வயதுடைய பரமநாதன் கதிர்ச்செல்வன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி வினோபா இந்திரனின் பணிப்புரைக்கு அமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி த.தவக்குமார் மரண விசாரணையினை முன்னெடுத்தார்.

மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கைக்கு...

எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவு-மீட்பு விலையிடலை மீண்டும் நிலைநிறுத்துவது தொடர்பான முன்தேவை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதா கவும் சர்வதேச நாணய நிதியம் உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகளைத் தவிர்த்தல் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளை விதிப்பதையோ அல்லது தீவிரப்படுத்துவதையோ தவிர்த்தல் ஆகிய இரண்டு தொடர்ச்சியான செயல்திறன் அளவுகோல்களை இலங்கை பின்பற்றத் தவறியுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

மத்திய கிழக்கு மோதல்களுடன் தொடர்புடைய உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் அதிகரித்து வரும் எண்ணெய் விலைகள் காரணமாக, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2025 இல் பதிவான 5வீதத்தில் இருந்து 2026 இல் 3வீதமாகக் குறையும் என்று சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. அதேநேரம், 2026 இல் பணவீக்கம் 5வீதமாக உயரும் என்றும், நடப்புக் கணக்கு இருப்பு மீண்டும் பற்றாக்குறையாக மாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

"டித்வா" சூறாவளியைத் தொடர்ந்தான மீட்புச் செலவினங்கள் உள்ளிட்ட பொருளாதார அதிர்ச்சிகளுக்குப் பதிலளிக்கும் வகையில் 2026 இல் நிதித் தளர்த்தல்களை மேற்கொள் வது பொருத்தமானது எனக் குறிப்பிட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், எனினும் 2027 ஆம் ஆண்டு முதல் இலங்கை தனது நிதி இலக்குகளுக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

நீண்ட கால ஸ்திரத்தன்மைக்கு நிலையான வருவாய் திரட்டல், பொது நிதி மேலாண்மை சீர்திருத்தங்கள், மின்சாரத் துறை சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்ந்து முக்கியமானவையாக விளங்குகின்றன என்று பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகமுரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிகப்படியான மாற்று விகித நெகிழ்வுத் தன்மை வெளிநாட்டு கையிருப்புகளை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான கட்டமைப்பு சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தையும் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## இராணுவம் மேலும்

இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது நாடு கடந்த காலங்களில் மூன்று தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகளைச் சந்தித்த ஒரு நாடாகும். அதேபோன்று, எதிர்காலத்தில் வெளியக அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் கூட நமக்கு வரக்கூடும்.

எனவே, தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தில் எக்காரணம் கொண்டும் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்கக்கூடாது. முப்படைகளும் எப்போதும் பலமாக இருக்க வேண்டும். குறிப்பாகப் புலனாய்வு அமைப்புகள் மிகவும் வலுவான கட்டமைப்புடன் இயங்க வேண்டும்.

நாம் முள்ளிவாய்க்கால் போரை முடிவுக்குக் கொண்டுவந்தபோது, மிகவும் பலம் பொருந்திய இராணுவக் கட்டமைப்பு நம்மிடம் இருந்தது. ஆனால், தற்போதைய நிலையில் அதில் 20 வீதமானவர்களே எஞ்சியிருக்கக் கூடும். ஏனையோர் அனைவரும் ஓய்வுபெற்றிருக்கலாம்.

ஒரு போர் ஏற்பட்ட பிறகு அவசர அவசரமாகக் கட்டியெழுப்பப்பட வேண்டியதொன்றல்ல இராணுவக் கட்டமைப்பு. நாட்டில் போர்ச் சூழல் நிலவினாலும் இல்லாவிட்டாலும், நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ராணுவம் எப்போதும் பலமாகவே பேணப்பட வேண்டும்.

நான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகும்போது நம்மிடம் 2 இலட்சம் இராணுவத்தினர் இருந்தனர். ஆனால், அந்த எண்ணிக்கை தற்போது பெருமளவில் குறைவடைந்துள்ளதுடன், தற்போதைய அரச தரப்பில் படைக்குறைப்பு பற்றியும் பேசப்பட்டு வருகின்றது. இது எவ்வகையிலும் ஏற்புடைய விடயம் அல்ல. முப்படைகளும் தத்தமது பலத்தைத் தக்கவைத்திருக்க வேண்டும்.

உலக வரைபடத்தில் சிங்கப்பூர் மிகச் சிறிய நாடாக இருந்தபோதிலும், தங்களது நாட்டின் வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கே அவர்கள் அதிகளவிலான நிதியை ஒதுக்குகின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது." -என்றார். (அ)

## பௌத்த விகாரைகளின்...

எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விகாரைகளின் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதுடன், அங்கு இடம்பெறும் துஷ்பிரயோகங்கள் குறித்தும் சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் மக்கள் ராஜபக்ஷர்கள், பிரேமதாஸக்கள் மற்றும் விக்கிரமசிங்க ஆகியோரை ஆட்சியிலிருந்து அகற்றியது, நாட்டின் வளங்களைச் சூறையாடிய ஊழல்வாதிகளை வெளியேற்றி, நாட்டைச் சீரமைப்பதற்காகவே தவிர, தலதா மாளிகை, அநுராதபுரம் அட்டமஸ்தானம் மற்றும் நாட்டின் ஏனைய புனித விகாரைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருவதற்காக அல்ல. இன்று சமூக வலைத்தளங்களில் சுவாரஷ்யத்திற்காகப் பரப்பப்படும் தவறான கருத்துக்களை நம்பி, அரசாங்கம் இத்தகைய அபாயகரமான முடிவுகளை எடுக்கக்கூடாது. குறிப்பாக, கலகெடிவத்தை சுதத் மற்றும் கெக்கிராவ சுதர்சன போன்றவர்கள் முன்வைக்கும் இத்தகைய முட்டாள்தனமான கருத்துக்கள் அரசாங்கத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்.

விகாரைகளின் நிர்வாகம் குறித்துப் பேசும் அதேவேளை, அங்கு இடம்பெறும் தவறுகளையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். விகாரைகளுக்குள் சிறுவர்களைத் துறவறம் பூணச் செய்து, அவர்களைத் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. அதேபோல், விகாரைகளுக்கு வரும் சிறுவன் சிறுமிகள் தாய்மார்கள் பக்தர்களைத் தவறான நோக்கில் அணுகுவதும், விகாரை வளாகங்களுக்குள் சாரதிகள் மற்றும் இளையோரை வைத்துக்கொண்டு முறையற்ற செயல்களில் ஈடுபடுவதும் கண்டிக்கத்தக்கவை.

ஒரு பிக்குவானவர், விகாரைக்குத் தர்மம் கேட்கவரும் தாயையும் மகளையும் மரியாதையுடன் நடத்தவேண்டுமே தவிர, அவர்களைக் குறித்த அறைகளுக்குள் அழைத்து முறையற்ற வகையில் நடந்துகொள்வது அப்பட்டமான துஷ்பிரயோகம். இத்தகைய விகாரைகளில் வாழும் பிக்குகள், தமது தனிப்பட்ட இன்பத்திற்காகவே மதத்தைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை-என்றார்.

## காணாமல் போனோருக்கான...

அத்துடன், வருடாந்த பாதீட்டுத் திட்டம் மற்றும் நிர்வாக ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, காணாமல் போனோர் தொடர்பான நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் இந்த ஆண்டு 370 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக இதற்கு முன்னர் ஒதுக்கப்பட்டிருந்த 10 மில்லியன் ரூபாய் நிதி நிறுத்தப்பட்டுள்ளதாக, "காணாமல் போனவர்களின் குடும்பங்கள்" அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ சுமத்தியிருந்த குற்றச்சாட்டுகளையடுத்தே இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த கருத்துத் தெரிவிக்கையில்,

"மூலதனச் செலவுகள் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளங்கள் பாதீட்டுத் திட்டத்தின் ஊடாகத் தனியாக வழங்கப்படுகின்றன. அதேநேரம், இந்த 370 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடானது காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தொடர்பான செயல்பாடுகளுக்காகவே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

இழப்பீட்டுத் திட்டங்களைக் கண்காணிப்பதற்காக அரசாங்கம் ஒரு தனிக்குழுவை நியமித்துள்ளதாகக் குறிப்பிட்ட தலைவர் கட்டுலந்த, "குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணக் கொடுப்பனவு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படும் தற்காலிகக் கொடுப்பனவு மட்டுமே. தங்களது அன்புக்குரியவர்களை இழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் முறையான இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்காகவே தற்போது இந்தத் தனிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்.

2000 இற்குப் பின்னர் பதிவான 6,700 காணாமல் போன சம்பவங்கள் குறித்து காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் இதுவரை தொடர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு, தற்போது 4,700 குடும்பங்கள் இந்த இடைக்காலக் கொடுப்பனவைப் பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒவ்வொரு அரசாங்கமும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்திற்குப் போதிய நிதியை வழங்கி, அதன் பணிகளைத் தடையின்றித் தொடர அனுமதித்துள்ளன.

அதேபோல, தற்போதைய அரசாங்கத்தின் கீழும் இவ்வாறான கொடுப்பனவுக் குறைப்புக்கள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் மகேஷ் கட்டுலந்த திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## நயினாதீவு படகிலிருந்து...

நடராசா மயூரன் (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார்

அதிபரும் மற்றுமொரு ஆசிரியரும் பயணிகள் படகைத் தவறவிட்டமையால் கடற்தொழிலாளி ஒருவரின் சிறு படகில் நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி பயணித்துள்ளனர்.

இதன்போது, கடற்காற்று காரணமாக கடல் கொந்தளிப்பாக காணப்பட்டமையால் படகு கடலையில் அடிப்பட்டு அதிபர் நிலை தடுமாறி கடலில் விழுந்துள்ளார்.

இதனை அடுத்து உடனடியாக செயற்பட்ட படகோட்டி அதிபரை மீட்க முற்பட்டபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## கடலுக்குச் சென்ற...

நேற்று முன் தினம் முதல் கடுமையான காற்று வீசி வருவதனால் படகுகள் விபத்துக்கு உள்ளகியிருக்கலாம் என மீனவர்கள் அஞ்சுகின்றனர்.

சக மீனவர்களைத் தீவிர தேடும் பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் கடற்படையின் உதவி காலையிலிருந்து கோரப்பட்டபோதும் இதுவரை அவர்களின் உதவி கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## கைத்தொலைபேசி...

இலக்கு வைத்து விழிப்புணர்வு திட்டங்களை நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன தெரிவித்துள்ளார்.

பிரதமரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் அவதானிக்கப்பட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் டிஜிற்றல் விவகார அமைச்சு, கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் யுனிசெப் உள்ளிட்ட சர்வதேச சிறுவர் நல அமைப்புகளும் பங்கெடுத்திருந்தன.

பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷன மேலும் குறிப்பிட்டதாவது-

பல பெற்றோர்கள் தங்களது அன்றாட வீட்டு வேலைகளைச் செய்யும்போது, தங்களது பிள்ளைகளை அமைதியாக வைத்திருக்க அல்லது அவர்களின் கவனத்தைத் திசைதிருப்ப ஸ்மார்ட் போன்களை பயன்படுத்துகின்றனர்.

தங்களின் வசதிக்காக மிகச் சிறிய வயதிலேயே பிள்ளைகளுக்கு ஸ்மார்ட்போன்களை அறிமுகப்படுத்துவதால், பிள்ளைகள் படிப்படியாகத் திரைகளுக்கு அதிகளவில் அடிமையாகும் நிலை ஏற்படுகிறது. எனவே, இந்த விழிப்புணர்வு திட்டங்கள் சிறுவர்களை விட வும் பெற்றோரை வழிநடத்துவதிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் திரை அடிமைத்தனம் அதிகரிப்பதற்குக் பெற்றோரின் இந்த அணுகுமுறையே மிக முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

பிள்ளைகளுக்குக் கட்டுப்பாடு இல்லாமல் ஸ்மார்ட்போன்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம், அவர்கள் தீங்கு விளைவிக்கும் இணையவழி உள்ளடக்கங்கள், சுரண்டல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் பெரும் அபாயம் உள்ளது-என்றார். (அ)

## செப்ரெம்பருடன்...

அந்த மானியத்தின் பயன்பாடு மற்றும் நிலவரத்தைப் பொறுத்து, திட்டம் அதற்கு முன்னரே முடிவுக்கு வரக்கூடும் என்றும் நாணய நிதிய அதிகாரிகளுடன் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ)

## சட்ட சிக்கலுக்கு...

கிடையாது. தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்து வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று குறிப்பிடும் தரப்பினர் தான் 2017ஆம் ஆண்டு புதிய தேர்தல் சட்டத்தை உருவாக்கி மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நெருக்கடிக்குள்ளாக்கினார்கள் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம். நாங்கள் தான் இந்த நெருக்கடியை உருவாக்கியதை போன்று எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

மாகாண சபைத் தேர்தலை பழையத் தேர்தல் முறையில் நடத்த வேண்டுமா அல்லது புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்ற சிக்கலுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு காண வேண்டும் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானமளித்துள்ளது.

தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கலுக்கு தீர்வு காண்பதற்காகவே பாராளுமன்ற விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இந்த பிரச்சினைக்கான தீர்வு அறிக்கையை குழு முன்வைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். தேர்தலை பிற்போட வேண்டிய நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது. தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டவுடன் மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் முறைமையில் ஆராய்ந்து நாட்டுக்கு பொறுத்தமான தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு விசேட பாராளுமன்ற குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஒருவருட காலத்துக்குள் இந்த குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

தேர்தல் முறைமைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை நன்கு அறிந்தே அரசியல் வெற்றிக்காக தேர்தலை நடத்த முடியாது. அவ்வாறு நடத்தினால் நிர்வாக கட்டமைப்பில் தான் பாதிப்பு ஏற்படும். கடந்த காலங்களில் அவ்வாறான தன்மையே காணப்பட்டது. அந்த தவறை நாங்கள் செய்ய போவதில்லை-என்றார். (அ)

## மாகாண சபைகளுக்கு...

என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு ஆளுங்கட்சி மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் ஆரம்பகால அதிகாரப் பகிர்வு மற்றும் மாகாண சபை முறைமைகளுக்குத் தீவிரமாக எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் மக்கள் விடுதலை முன்னணியினரே முக்கிய பங்கு வகித்திருந்தனர்.

வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, புனித தலதா மாளிகை மீது முதலாவதாகத் தாக்குதல் நடத்தவில்லை. ஜே.வி.பி தான் கடந்த 1989 ஆம் ஆண்டு முதன்முதலில் தலதா மாளிகை மீது ஆயுதத் தாக்குதலை நடத்தியிருந்தது.

அந்தப் பீதி நிலவிய காலகட்டத்தில், மாகாண சபை முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நாடு முழுவதும் அரச சொத்துக்களுக்குத் தீவைக்கும் பேரழிவுச் சம்பவங்களில் ஈடுபட்டது. இவர்களது வன்முறைக் கலாசாரத்தினால் அன்றைய காலகட்டத்திலேயே அரசுக்கு 288 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பாரிய நிதி இழப்பு ஏற்பட்டது.

இவ்வாறு ஒட்டுமொத்த நாட்டுக்கும் தீ வைத்து, நாட்டின் பொருளாதாரத்தை அழித்த ஜே.வி.பி. தான், இன்று மேடைகளில் ஏறி நின்று கடந்த 75 ஆண்டுகாலப் பாரம்பரிய அரசியல் ஆட்சியை "நாட்டின் சாபம்" என்று தம்பட்டம் அடிக்கின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்து, உண்மையில் யார் இந்த நாட்டுக்குச் சாபமாகச் செயற்பட்டார்கள் என்ற உண்மையை இன்றைய இளம் தலைமுறையினர் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் எமது அரசியல் பயணத்தில் கட்சிகளைத்தான் மாற்றினோம். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியினரோ அதிகாரத்துக்காகத் தங்களது அடிப்படைக் கொள்கையையே முற்றாக மாற்றியுள்ளார்கள். அன்று மாகாண சபைத் தேர்தல் முறைமைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய மக்கள் விடுதலை முன்னணி, இன்று தாங்கள் ஆட்சியில் இருந்து கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தட்டிக் கழித்து, அதனைத் தொடர்ந்து பிற்போட்டு வருகின்றது." - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மாகாண தேர்தலை உடன் நடத்துவதாக கூறியவர்கள் காணாமற்போயுள்ளனர்!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 29

ஆட்சியைப் பிடித்தவுடன் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்துவதாக ஆரம்பத்தில் உறுதியளித்தவர்கள், தற்போது தேர்தல் பிரசாரங்களில் இருந்து காணாமல் போயுள்ளனர் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் முக்கிய தீர்மானங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் அமைச்சர்களால் அல்லது “பெலவத்தை கட்சி காரியாலயத்தின்” செயலாளராலேயே எடுக்கப்படுகின்றன என்பதை நாட்டின் மக்கள் தற்போது தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபை தேர்தல்களை மேலும் ஒத்திவைப்பதற்கான வழிகளையே தேடி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்துக்கு எந்தவொரு தேர்தலையும் நடாத்துவதற்கான தகுதியோ அல்லது ஆளுமையோ இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# கிராஞ்சி பகுதியில் மக்கள் போராட்டம்!



கிளிநொச்சி, மே. 29

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராஞ்சி மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து முன்னெடுக்கப்படும் கனிம மணல் அகழ்வு மற்றும் காற்றாலைத் திட்டங்களுக்கு எதிராக நேற்று கிராம மக்கள் மற்றும் பொது அமைப்புக்ககளால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட போராட்டக்காரர்கள் தெரிவிக்கையில்-

இலங்கையில் காற்றாலை, கனிம மணல் அகழ்வு போன்ற திட்டங்களினால் மக்களுடைய வாழ்வாதாரம் மற்றும் மண்வளம் அபகரிக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. கடந்த கால அரசாங்கங்கள் செய்ததையே இந்த அரசாங்கமும் செய்கின்றது. கடந்த கால அரசாங்கங்கள் இனங்கண்ட இடங்களில் தான் கனிம மண் அகழ்வு, காற்றாலைத் திட்டம் போன்றவற்றை இந்த அரசாங்கமும் முன்னெடுத்துச் செல்கின்றது.

இவ்வாறான திட்டங்களினால் மக்கள் வெகுவாக பாதிப்படைகின்றனர்.

இவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், குடியேற்றத்தையும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை. கிட்டத்தட்ட கிராஞ்சிப் பகுதியில் 8000 தென்னம்பிள்ளைகளை அழித்து ஒரு அபிவிருத்தி நடக்கின்றது. அவ்வாறான ஒரு அபிவிருத்தி எமக்கு தேவையில்லை.

கிராஞ்சி மக்கள் தென்னம்பிள்ளைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு இருக்கின்றார்கள்.

அவ்வாறு 2000 குடும்பங்கள் தென்னம்பிள்ளைகளை வாழ்வாதாரமாக நம்பி அங்கு வாழ்ந்து கொண்டிருக்கையில், அரசு அவற்றை அழித்து இவ்வாறான ஒரு அபிவிருத்தியைக் கொண்டு வருவதை ஏற்கமாட்டோம்.

மக்களினுடைய வளம், நிலம் சுரண்டப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.-என்றனர்.

இந்தப் போராட்டத்தில் அரசியல் வாதிகள் மத தலைவர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# சமூக ஊடகங்களில் வரும் கண்மூடித்தனமான பதிவுகள்!



யாழ்ப்பாணம், மே. 29

சமூக ஊடகங்களில் வெளிவரும் தகவல்களின் உண்மைத்தன்மையையும், அதன் பின்னணியையும் தீர்க்கமாக ஆராய்ந்த பின்னரே அவற்றிற்கு விருப்பம் தெரிவிக்கவோ அல்லது பகிரவோ வேண்டும். சமூக ஊடகங்களில் வரும் அனைத்தையும் கண்மூடித்தனமாக நம்புவதால் சமூகத்தில் பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

“சமூக ஒற்றுமைக்கான பொறுப்பான டிஜிற்றல் சமூகம்” எனும் தொனிப்பொருளின் கீழ், வடமாகாண இளையோர் மற்றும் சிறுவர் பங்கேற்புக்கான விசேட மதிப்பளித்தல் நிகழ்வு, யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் “சொண்ட்” நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று வியாழக்கிழமை முற்பகல் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் ஆளுநர் மேலும் உரையாற்றுகையில்,

“சமூகத்தில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும் பிரதான ஊடகமாகச் சமூக வலைத்தளங்கள் மாறியுள்ள இன்றைய காலகட்டத்தில், இவ்வாறானதொரு விழிப்புணர்வு நிகழ்வு நடைபெறுவது மிகவும் வரவேற்கத்தக்கது. சில தினங்களுக்கு முன்னர், வடக்கு மாகாணத்தில் வெசாக் கொண்டாட்டங்களுக்கு ஆளுநர் தடை விதித்துள்ளதாகத் தென்பகுதியிலுள்ள சமூக ஊடகங்களில் ஒரு செய்தி திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. சமூகங்களுக்கிடையே குரோதத்தை உருவாக்கும் தீய நோக்கோடு இத்தகைய பொய்ச் செய்திகள் வேகமாகப் பகிரப்பட்டன. இது தொடர்பில் நான் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்துள்ளேன். நாங்கள் சொல்லாத, செய்யாத விடயங்களைக்கூட ஏதோவொரு தேவைக்காக இவ்வாறு சமூகத்தில் பரப்புகின்றார்கள்.

நீங்கள் சமூக விரோதச் செயல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தால், சமூக ஊடகங்கள் ஊடாக உங்கள் மீது சேறுபூசப்படும். உங்களைப் பற்றிப் பொய்யான தகவல்கள் பரப்பப்பட்டு, உங்கள் நன்மதிப்பைக் கெடுப்பதற்கு முற்படுவார்கள். மாறாக, சமூக விரோதச் செயல்களுக்குத் துணை நின்றால் உங்களைத் தூக்கிக் கொண்டாடுவார்கள். துரதிஷ்டவசமாக, தற்போது சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களே பலமானவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் பலரை வைத்துச் சமூக ஊடகங்களைத் தமக்குச் சாதகமாக இயக்கியும் வருகின்றனர்.

எனவே, சமூக ஊடகங்களில் வெளிவருகின்ற விடயங்கள் தொடர்பில் இளம் சமுதாயத்தினர் மட்டுமல்லாது, அனைவரும் அதீத அவதானத்துடன் செயற்பட வேண்டும். ஒரு தகவல் பகிரப்படும் போது அதன் உண்மைத்தன்மையையோ அல்லது அது எத்தகைய நோக்கத்துக்காகப் பகிரப்படுகின்றது என்பதையோ கட்டாயம் ஆராய வேண்டும். நாம் பின்தொடரும் அல்லது விருப்பம் தெரிவிக்கும் ஒரு சமூக ஊடகப் பதிவு உண்மையானதா என்பதைப் பலமுறை சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்” என வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா, யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி சதீஸ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி கே.சண்முகநாதன், வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கஜவிந்தன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுடன் மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)

# சுற்றுலாத்துறையில் மீண்டும் சாதனை படைத்த இலங்கை!

கொழும்பு, மே. 29

நடப்பு ஆண்டின் மே மாதம் நிறைவடைவதற்கு முன்னதாகவே, இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்துள்ளதாக வெளிவிவகார, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், இலங்கை சுற்றுலாத்துறை வரலாற்றில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் இந்த மைல்கல் சாதனை எட்டப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்ற நிலைமைகளால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் ஸ்திரமற்ற தன்மை காரணமாக கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சற்றே மந்தநிலை காணப்பட்டது.

எனினும், கடந்த 2025 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட சாதனை அளவிலான சுற்றுலா வளர்ச்சியைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் ஐந்து மாதங்களுக்குள் 10 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

2026 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த நாடுகளின் வரிசையில் இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியாவிலிருந்து மாத்திரம் 2 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதனைத் தவிர்த்து ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் இலங்கையின் முதன்மை சுற்றுலாச் சந்தைகளாக விளங்குகின்றன.

(அ)

# இந்த வருட இறுதிக்குள் கட்டாயம் மாகாணசபை தேர்தலை நடத்துக!

## எதிரணிகள் வலிறுயுறுத்து

கொழும்பு, மே. 29

மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் கட்டாயம் நடத்துமாறு, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிரணிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

எதிரணிகள் இணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் விசேட ஊடக சந்திப்பை நடத்தின.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி, சுதந்திரக் கட்சி உட்பட மேலும் சில கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் அமைச்சர்களான ஜிஎல் பீரிஸ், நிமல் சிறிபாலடி சில்வா, ராஜித சேனாரத்ன, வஜிர அபேவர்ன உள்ளிட்டோரும், முன்னாள் எம்.பிக்களான சுமந்திரன், லசந்த அழகியவன்ன, சமன் ரத்ன பிரிய, வடிவேல் சுரேஸ் உள்ளிட்டவர்களும் ஊடக சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அரசியல் பிரதிநிதிகள், இவ்வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினர்.

மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது என ஜே.வி.பி. செயலாளர் கூறியது ஜனநாயக விரோதம் எனவும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

“மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது எனக் கூறும் அதிகாரம் கட்சி செயலாளருக்கு கிடையாது. எனவே, தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டத் திருத்தத்தை உடன் பாராளுமன்றத்தில் நிறை வேற்றி தேர்தலை நடத்துமாறு எதிரணிகள் ஒருமித்த குரலில் வலியுறுத்துகின்றன.”-என்று குறிப்பிட்டார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media